வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்

2017 மத்திய ஆண்டின் மதிப்பீடு

அக்டோபர் 2021

© Verité Research

உள்ளடக்க அட்டவணை

"வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்" 3

செயற்படும் விதம் 3

1. செலவீன முன்மொழிவுகள் 5

1.1. வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் 5

1.2. அரச நிறுவனங்களுக்கான வெளிப்படைத்தன்மை தரவரிசை 6

1.3. முன்னேற்றக் கண்காணிப்பான் 7

2. கொள்கைத் திட்டங்கள் 9

2.1. முன்னேற்றக் கண்காணிப்பான் 9

3. முன்னேற்றம், திறந்த நிலை மற்றும் தரவரிசை மதிப்பீடுகளின் விவரங்கள். 11

“வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்”

“வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்” என்பது அரசாங்கம் அதன் வருடாந்த வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை பின்தொடர்ந்து கவனிக்கும் ஒரு முன்னோடி இணைய மேடையாகும்.

2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இணைய மேடை, அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்ட உரை சம்பந்தமான இரண்டு அடிப்படையான கேள்விகளுக்கு பதிலளிக்க முனைகின்றது.

(i) அரசாங்கம் சொல்வதை செய்கின்றதா?
(ii) அரசாங்கம் செய்வதை சொல்கின்றதா?

இக்கேள்விகளுக்கான பதில்களை பகிரங்கமாக வழங்குவதன் மூலம், இந்த இணைய மேடை பின்வருவனவற்றை அடைய முயல்கின்றது.

(i) அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகளின் வெளிப்படை தன்மையை மேம்படுத்தல்
(ii) இவ்வாக்குறுதிகளுக்கு அரசாங்கத்தை பொறுப்பாளி ஆக்குதல்

செயற்படும் விதம்

BudgetPromises.Org இணைய மேடையானது, வரவு செலவுத் திட்ட உரையில் உள்ள ரூ.500 மில்லியனுக்கு மேற்பட்ட புதிய செலவின முன்மொழிவுகளை அல்லது ‘வாக்குறுதிகளை’ கண்காணிக்கிறது. (இம்முன்மொழிவுகளை வரவு செலவுத் திட்ட உரையின் பின்னிணைப்பு 2 இல் காணலாம்). 2019 ஆம் ஆண்டில், செலவீன ஒதுக்கீடு இல்லாத சட்டங்கள் மற்றும் விதிமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற கொள்கை முன்மொழிவுகளையும் இந்த இணைய மேடையானது கண்காணிக்க ஆரம்பித்தது.

ஆண்டு	செலவீன முன்மொழிவுகள்			கொள்கை முன்மொழிவுகள்
	தெரிவு செய்வதற்கான அளவுகோல்**1**	முன்மொழிவுகளின் எண்ணிக்கை	திட்டங்களின் மொத்த மதிப்பு	முன்மொழிவுகளின் எண்ணிக்கை
2017	ரூ.1பில்லியனுக்கு மேற்பட்டது	37	ரூ. 116,910 மில்லியன்	எதுவுமில்லை
2018	ரூ.1பில்லியனுக்கு மேற்பட்டது	38	ரூ. 149,350 மில்லியன்	எதுவுமில்லை
2019	ரூ.500 மில்லியனுக்கு மேற்பட்டது	37	ரூ. 100,875 மில்லியன்	22

இந்த இணைய மேடையானது வருடத்துக்கு இரண்டு தடவைகள் புதுப்பிக்கப்படும், அத்துடன் ஒவ்வொரு செலவீன முன்மொழிவும் இரண்டு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றது: **வெளிப்படைத்தன்மை** மற்றும் **முன்னேற்றம்**. கொள்கைத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவது ஒரே ஒரு குறிகாட்டியான **முன்னேற்றத்தை** மாத்திரம் பயன்படுத்தி கண்காணிக்கப்படுகின்றது. கொள்கைத் திட்டங்களின் நிலை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளில் தங்கியிருக்காமல், முக்கியமாக பொதுவெளியில் கிடைக்கும் தகவல்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றது. எனவே, கொள்கைத் திட்டங்களின் மதிப்பீடானது வெளிப்படைத்தன்மை குறிகாட்டியைக் கொண்டிருக்கவில்லை.

முதல் ஆறு மாதங்களுக்கான, வருட நடுப்பகுதி செயல்திறன் மதிப்பீடானது அக்டோபர் மாதத்தில் வெளியிடப்படும். அதேவேளை, முழு வருடத்திற்கான ஆண்டிறுதி செயல்திறன் மதிப்பீடானது தொடர்ந்து வரும் வருடத்தின் ஏப்ரல்/மே மாதங்களில் வெளியிடப்படுகின்றது[2].

[1] 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்வதற்கான அளவுகோல், திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட செலவின ஒதுக்கீட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட உரையின் அறிக்கையிடும் வடிவம் மாறியதனால், தெரிவுசெய்வதற்கான அளவுகோல் முன்மொழியப்பட்ட செலவின ஒதுக்கீடு மற்றும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

[2] 2019 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட உரை தாமதமானதுடன், 2019 மார்ச் மாதத்திலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே 2019 ஆம் ஆண்டில் ஆண்டிறுதி மதிப்பீடு மாத்திரமே முன்னெடுக்கப்பட்டது.

1. செலவீன முன்மொழிவுகள்

1.1. வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்

இச்சுட்டியானது ஒவ்வொரு வாக்குறுதி தொடர்பாகவும் அரசாங்கம் தான் செய்வது பற்றி எந்தளவு வெளிப்படுத்துகிறது என்பதைக் கண்காணிக்கிறது. இக்கண்காணிப்பான் ஆனது, ஒவ்வொரு வாக்குறுதிகளையும் நடைமுறைப்படுத்துவது தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்படும் அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையின் நிலையை அளவிடுகின்றது. அரசாங்க இணையத்தளங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை கண்காணிப்பான் பயன்படுத்துகின்றது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அரசாங்க நிறுவனங்களுக்கு விஜயம் செய்தும், முறைசாரா கோரிக்கைகளின் மூலமாகவும் தகவல்கள் திரட்டப்பட்டன. எனினும், இந்த தகவல் சேகரிக்கும் முறை நிறுத்தப்பட்டுள்ளது.

வருட நடுப்பகுதி மதிப்பீடானது, ஒவ்வொரு வாக்குறுதியினதும் முதல் ஆறு மாதத்திற்கான முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்பட்ட அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையின் அளவை மதிப்பிடுகின்றது. ஆண்டிறுதி மதிப்பீடானது, முழு வருடத்திற்குமான முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்பட்ட வெளிப்படைத் தன்மையின் அளவை மதிப்பிடுகின்றது.

மதிப்பீட்டின் போது கிடைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படைத்தன்மை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது:

வெளிப்படையற்றது	- வாக்குறுதியின் முன்னேற்றதைப்பற்றித் தீர்மானிப்பதற்கு தேவையான எவ்வித தகவலும் இல்லை.
மட்டுப்படுத்தப்பட்டது	- கண்காணிக்கப்படும் கால இடைவெளியில் ஒரு முழுமையான மதிப்பீட்டை வழங்குவதற்குப் போதுமான தகவல்கள் இருக்கவில்லை.
ஒத்துழைக்கப்படாதது	- வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கடும் முயற்சியினால் பெறப்பட்டது அல்லது கடும் முயற்சியினால் மதிப்பிடப்பட்டது.

ஒத்துழைக்கப்பட்டது	- வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான வேண்டுகோள்களுக்கு, தகவல்கள் காலதாமதமின்றி வழங்கப்பட்டது.
வெளிப்படையானது	- வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான முழுத் தகவல்களும் முன்வந்து வெளிப்படுத்தப்பட்டது.

1.2. அரச நிறுவனங்களுக்கான வெளிப்படைத்தன்மை தரவரிசை

அரச நிறுவனங்கள் தாங்கள் பொறுப்பேற்றுள்ள வாக்குறுதிகள் தொடர்பாக தகவல்களை வெளியிடுவதில் உள்ள வெளிப்படைத்தன்மையை ஒப்பிட்டு தரவரிசையை இது வழங்குகின்றது. ஒவ்வொரு நிறுவனமும் 0 முதல் 100 வரையில் மதிப்பெண்களைப் பெற்றுக்கொள்ளும், 100 என்பது உயர்ந்த பட்ச வெளிப்படைத்தன்மையை குறிக்கின்றது. அதன் பின்னர் அரச நிறுவனங்கள் மதிப்பெண்கள் அதிகமானது முதல் குறைவானது வரை தரவரிசைப்படுத்தப்படும், குறித்த ஆண்டில் அவற்றின் செயல்திறனை இது வெளிப்படுத்துகின்றது.

நிறுவனத்தின் கீழ் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஒவ்வொன்றுக்குமான மதிப்பெண்களின் சராசரியைக் கணக்கிடுவதன் மூலம் அரச நிறுவனத்தின் மொத்த புள்ளிகள் கணக்கிடப்படுகின்றன. ஒவ்வொரு வாக்குறுதியும் 0 முதல் 100 வரை மதிப்பெண்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு தனிப்பட்ட வாக்குறுதிக்குமான மதிப்பெண்கள் கீழ்வருவனவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படும். (1) வாக்குறுதியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதில் தகவல்களின் பயன்பாட்டுத்தன்மை (2) தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இலகுத்தன்மை.

தகவலின் பயன்பாடு: கிடைத்த தகவல்கள் முழுமையாக பயன்படுத்தப்படக்கூடியவை, பகுதியளவில் பயன்படுத்தப்படக்கூடியவை அல்லது பயன்படுத்த முடியாதவை என்ற அடிப்படையில் ஒவ்வொரு வாக்குறுதிக்கும் 100, 50 அல்லது 0 என்ற ஆரம்ப மதிப்பெண்கள் வழங்கப்படும்.

தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இலகுத்தன்மை: பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ஆரம்ப மதிப்பெண், தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இலகுத்தன்மைக்கு ஏற்ப மாற்றப்படுகின்றது. தகவல்கள் கோரப்பட்டதன் பின்னர் வழங்கப்படும், அதாவது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளின் மூலமாக பெறப்படும் தகவல்களுடன் ஒப்பிடுகையில், தகவல்களைக் கோருவதற்கு முன்னரே அவற்றை வழங்கும், அதாவது

ஒன்லைன் மூலம் வழங்கப்படும் தகவல்களுக்கு அதிக மதிப்பெண்கள் வழங்கப்படும்.



1.3. முன்னேற்றக் கண்காணிப்பான்

இந்தச் சுட்டியானது அரசாங்கம் தாம் செய்வதாக சொல்பவற்றை எந்தளவுக்கு செய்கிறது என்பதைக் கண்காணிக்கின்றது. இது அரசாங்கம் அதன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தினாலேயே நிர்ணயிக்கப்பட்ட நேர அட்டவணை மற்றும் மைல் கற்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அதன் முன்னேற்றத்தை மதிப்பிடுகின்றது

ஒரு வாக்குறுதியின் வருட நடுப்பகுதி மதிப்பீடானது பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது:

தகவல் வெளிப்படுத்தப்படவில்லை	- வாக்குறுதி சம்பந்தமாக எவ்வித தகவல்களும் இன்மை, அல்லது காணப்படும் தகவலினால் எவ்வித உபயோகமும் இன்மை.
கைவிடப்பட்டுள்ளது	- வாக்குறுதி கைவிடப்பட்டுள்ளது அல்லது பிற்போடப்பட்டுள்ளது. அத்துடன் அதன் அமுலாக்கம் கண்காணிக்கப்படும் காலஇடைவெளியில் திட்டமிடப்படாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

	புறக்கணிப்பட்டுள்ளது	- வாக்குறுதி அமுல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது, ஆனால் திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்படவில்லை
	பின்தங்கியுள்ளது	- வாக்குறுதி அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது, ஆனால் திட்டமிடப்பட்ட காலஅட்டவணையுடன் ஒப்பிடும் போது பின்தங்கியுள்ளது.
	முன்னேறியுள்ளது	- வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றதுடன் குறித்த இலக்கை குறிப்பிடப்பட்ட நேரத்தினுள் அல்லது அதற்கு முன்னர் அடைவதற்கான நிலையில் காணப்படுகின்றது.[3]

ஒரு வாக்குறுதியின் ஆண்டிறுதி மதிப்பீடானது பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது:

	தகவல் வெளிப்படுத்தப்படவில்லை	- வாக்குறுதியின் நிலைமையை தீர்மானிப்பதற்குரிய தகவல்கள் வழங்கப்படவில்லை. அல்லது வழங்கப்பட்ட தகவல் போதுமானதாகவோ உபயோகமானதாகவோ இருக்கவில்லை.
	கைவிடப்பட்டுள்ளது	- வாக்குறுதியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை, அல்லது வாக்குறுதியானது அமுலாக்கல் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது.
	முன்னேற்றம் அற்றது	- வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 33% க்கும் குறைவாக அடையப்பட்டுள்ளது.

[3] ஒரு குறிப்பிட்ட வாக்குறுதி ஜூன் 30 2019 அன்றைக்கு இலக்கிடப்பட்ட அடைவின் 90% இனை அடைந்திருக்கும் பட்சத்தில் அவ்வாக்குறுதி முன்னேற்றகரமானது என வகைப்படுத்தப்படுகின்றது

பகுதியளவு நிறைவேறியது	- வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 33% க்கும் குறைவாக அடையப்பட்டுள்ளது.
கணிசமானளவு நிறைவேறியது	- வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 66% க்கும் 80% க்கும் இடையில் அடையப்பட்டுள்ளது.
முற்றாக நிறைவேறியது	- வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 80% க்கும் அதிகமாக அடையப்பட்டுள்ளது.

2. கொள்கைத் திட்டங்கள்

வரவு செலவுத்திட்ட உரையில் அரசாங்கம் உறுதியளிக்கும் கொள்கைகளின் முன்னேற்றங்களைக் கண்காணிக்கும் வகையில் 2019 ஆம் ஆண்டில் budgetpromises.org தனது நோக்கத்தை விரிவாக்கிக் கொண்டது. இந்த திட்டங்களுக்கு எந்த செலவின ஒதுக்கீடும் இல்லை.

'நிறைவேற்றப்பட்டது' அல்லது 'பகுதியளவில் நிறைவேற்றப்பட்டது' எனக் கருதப்படுவதற்கு சட்ட ரீதியான செயற்பாடு அல்லது ஒழுங்குமுறை அறிவிப்பு (வர்த்தமானி) தேவைப்பட்ட திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. பகிரங்கமாக பொதுவெளியில் கிடைக்கும் தகவல்கள் அதாவது வர்த்தமானி அறிவித்தல்கள், அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் அமைச்சரவை முடிவுகள் தொடர்பான அரசாங்க தகவல் திணைக்கள அறிக்கைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியே திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள முன்னேற்றம் தொடர்பில் மதிப்பிடப்படுகின்றது. கொள்கை தொடர்பில் எந்தவித தகவலும் பகிரங்கமாக கிடைக்காத சந்தர்ப்பத்தில், கடிதங்கள், தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் மின்னஞ்சல் மூலமாக அமைச்சுக்களிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளப்பட்டது.

2.1. முன்னேற்றக் கண்காணிப்பான்

வரவு செலவுத்திட்ட உரையில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைத் திட்டங்களை செயற்படுத்துவதில் அரசாங்கம் முன்னெடுத்த முன்னேற்றத்தின் அளவினை இது கண்காணிக்கின்றது.

தகவல் வெளிப்படுத்தப்படவில்லை	- வாக்குறுதி சம்பந்தமாக எவ்வித தகவல்களும் இன்மை, அல்லது காணப்படும் தகவலினால் எவ்வித உபயோகமும் இன்மை.
நிறைவேற்றப்படவில்லை	- திட்டத்தின் எந்தவொரு பகுதிக்கும் தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல்கள் (வர்த்தமானி) வெளியிடப்படவில்லை. இதனை சம்மந்தப்பட்ட அமைச்சு/அரச நிறுவனம் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.
பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது	- திட்டத்தின் முழுமைக்கும் அன்றி ஒரு சில பகுதிகளுக்கு, தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளது
நிறைவேற்றப்பட்டுள்ளது	- கொள்கைத் திட்டமானது முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. திட்டத்தின் முழுமைக்கும் தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளதுடன், மேலதிக எந்த நடவடிக்கையும் தேவையில்லை.

3. முன்னேற்றம், திறந்த நிலை மற்றும் தரவரிசை மதிப்பீடுகளின் விவரங்கள்.

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
தேசிய டிஜிட்டல் அடையாள அட்டை	வெளிப்படையானது	கணிசமானளவு நிறைவேறியது	தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்புகள் அபிவிருத்தி அமைச்சு / தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள்
	முன்னேற்றம் தொடர்பாக அமைச்சு பெருமளவு தகவல்கள் வழங்கியது.	முழு கருத்திட்ட நிறைவு 2019 இல் ஆகும். எனினும், 2017 ஆம் ஆண்டில் அவர்களது இலக்குகளுக்கமைய, இந் நிறுவனம் பெருமளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. பெறுகை நடைமுறையில் ஏற்பட்ட	

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
		தாமதம் காரணமாக கருத்திட்டத்தின் நோக்கெல்லை குறைக்கப்பட்டுள்ளது.	
தேசிய தரவு நிலையத்தைத் தாபித்தல்	வெளிப்படையானது	பகுதியளவு நிறைவேறியது	தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்புகள் அபிவிருத்தி அமைச்சு / தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள்
	தேசிய தரவுகள் நிலையத்தின் முன்னேற்றம் தொடர்பாக அமைச்சு பெருமளவு தகவல்கள் வழங்கியது. கருத்திட்டம்; தொடர்பான விபரங்கள் நிறுவனத்தின் வலைத்தள இணையத்தில் உள்ளன. எனினும், தேசிய கொடுப்பனவு மேடையின் முன்னேற்றம்	காணியை இனங்காண்பதில் நிலவிய சிரமம் காரணமாக தேசிய தரவுகள் நிலைய கருத்திட்டம் தாமதமடைந்தது. இக்காலப்பகுதிக்கான தேசிய கொடுப்பனவு மேடை அடைந்த	

வரவு செலவுத் திட்ட வாக்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்	முன்னேற்றக் கண்காணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
	தொடர்பாக எவ்வித தகவலும் இல்லை.	முன்னேற்றத்தின் நிலையை தீர்மானிப்பதற்கு தகவல் போதாது.	
அமைச்சுக்காக வீடியோ கருத்தரங்கு வசதிகளை வழங்குதல்	ஒத்துழைக்கப்பட்டது	கைவிடப்பட்டுள்ளது	
	முன்னேற்றம் தொடர்பாக அமைச்சு பெருமளவு தகவல்கள் வழங்கியது	கருத்திட்ட முன்மொழிவு 2017 ஆம் ஆண்டு அமுலாக்கத் திட்டத்திலிருந்து மீளப்பெறப்பட்டது.	
அரசு நிறுவனங்கள் மற்றும் கிராஸ் அரசாங்க ஆவணங்களுக்கு வீடியோ கான்பரன்சிங் வசதி	மட்டுப்படுத்தப்பட்டது	முற்றாக நிறைவேறியது	தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்புகள் அபிவிருத்தி அமைச்சு / தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள்

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
	கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 3 வது காலாண்டு அறிக்கையிலிருந்து முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. கருத்திட்டம் தொடர்பான சில தகவல்கள் நிறுவனத்தின் வலைத்தளத்தில் உண்டு.	ICTA செயல் திட்டத்தின்படியான தனது 2017 ஆம் ஆண்டு இலக்குகளைக் முந்திச் செல்கிறது. எனினும், கருத்திட்ட நிறைவு ஆண்டு 2019 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	
சிறப்பான அமலாக்கத்திற்கு நவீன உபகரணங்களுடன் பொலிஸ் திணைக்களம் வழங்கல்	வெளிப்படையானது	பகுதியளவு நிறைவேறியது	தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்புகள் அபிவிருத்தி அமைச்சு / தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள்
	முன்னேற்றம் தொடர்பாக நிறுவனம் பெருமளவு தகவல்கள் வழங்கியது.	அரசாங்கங்களுக்கிடையிலான டிஜிட்டல் ஆவணம் மற்றும் வீடியோ மாநாடு ஆகியவற்றுக்கான	

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
		முன்னேற்றம் 54% ஆக உள்ளது.	
தோல்வியுற்ற வங்கியல்லாத நிதி நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதற்கான நிதிச் சொத்து முகாமைத்துவ முகவராண்மையை தாபித்தல்	வெளிப்படையற்றது	தகவல் வெளிப்படுத்தப்படவில்லை	FAMA - நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
	உரிய அதிகாரிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்ட பின்னரும்கூட அமைச்சு எவ்வித தகவல்களையும் வழங்கவில்லை.	முன்னேற்றத்தைக் கண்டறிவதற்கு தகவல் போதாது.	
இலங்கையில் இறக்குமதி ஏற்றுமதி வங்கியொன்றைத் தாபித்தல	ஒத்துழைக்கப்படாதது	கைவிடப்பட்டுள்ளது	தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
	கருத்திட்டம் இரத்து செய்யப்பட்டது என்பதை RTIகள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்கள் எடுத்துக்காட்டின. இரத்து செய்யப்பட்டமைக்கான காரணமும் வழங்கப்பட்டது.	காலநிலை தொடர்புபட்ட அவசர தேவைகளுக்காக நிதிகள் மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டமையினால், இம் முன்மொழிவு 2107 இல் அமுல் படுத்தப்படவில்லை.	
வீடமைப்பு வங்கிகளுக்கான மூலதனத்தை இடுதல்	ஒத்துழைக்கப்படாதது	கைவிடப்பட்டுள்ளது	அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு
	கருத்திட்டம் இரத்து செய்யப்பட்டது என்பதை RTIகள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்கள் எடுத்துக்காட்டின. இரத்து செய்யப்பட்டமைக்கான காரணமும் வழங்கப்பட்டது.	காலநிலை தொடர்புபட்ட அவசர தேவைகளுக்காக நிதிகள் மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டமையினால், இம் முன்மொழிவு 2017 இல் அமுல் படுத்தப்படவில்லை.	
சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்காகவும் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு வட்டியின்றிய கடனை வழங்குவதற்காக 2 கிராம சேவகர் பிரிவுகளுக்கு ரூபா	வெளிப்படையானது	கைவிடப்பட்டுள்ளது	தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
1 மில்லியன் வீதம் வழங்குதல்			
	மீள் ஒதுக்கீடு தொடர்பாகவும் மீள் ஒதுக்கிடு செய்யப்பட்ட நிதிகளின் நிதி முன்னேற்றம் தொடர்பாகவும் அமைச்சு சில தகவல்களை வழங்கியுள்ளது.	இவ்வாக்குறுதிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு (RIDP) மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அமைச்சு கூறுகின்றது. RIDP இன் நிதி அறிக்கைகள் இந்நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டதென்று எடுத்துக் காட்டுகின்றன.	
விஞ்ஞானகூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை வழங்குதல் உட்பட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி	மட்டுப்படுத்தப்பட்டது	கணிசமானளவு நிறைவேறியது	கல்வி அமைச்சு
	கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 3	கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத்	

வரவு செலவுத் திட்ட வாக்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்	முன்னேற்றக் கண்காணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
	வது காலாண்டு அறிக்கையிலிருந்து முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட பின்னரும்கூட அமுல்படுத்தும் அமைச்சுக்கு விடுக்கப்பட்ட RTI களுக்கு எவ்வித பதிலும் இல்லை.	திணைக்களத்தின் 3 வது காலாண்டு அறிக்கையின்படி, இவ்வாக்குறுதி 75 வீத முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. எனினும், ரூபா. 5000 மில்லியன் கருத்திட்ட செலவினத்தில் ரூபா 1000 மில்லியன் மாத்திரமே 2017 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூபா 4000 மில்லியன் காலநிலை தொடர்புபட்ட புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண செயற்பாடுகளுக்கு மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.	
க.பொ.த. உயர்தரம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இலவசமாக 'டப்' வழங்குதல்	மட்டுப்படுத்தப்பட்டது	பகுதியளவு நிறைவேறியது	கல்வி அமைச்சு

வரவு செலவுத் திட்ட வாக்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்	முன்னேற்றக் கண்காணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
	கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 3 வது காலாண்டு அறிக்கையிலிருந்து முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட பின்னரும்கூட அமுல்படுத்தும் அமைச்சுக்கு விடுக்கப்பட்ட RTI களுக்கு எவ்வித பதிலும் இல்லை.	கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 3 வது காலாண்டு அறிக்கையின்படி, இவ்வாக்குறுதி 40 வீத முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.	
ஒரு பாடசாலைக்கு அதிகபட்சமாக 50 கணினிகளை வாடகை அடிப்படையில் வழங்குதல்	வெளிப்படையற்றது	தகவல் வெளிப்படுத்தப்படவில்லை	கல்வி அமைச்சு
	வாக்குறுதிகள் தொடர்பாக அமைச்சு சில தவல்களை வழங்கியுள்ளது. பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பாக எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை.	முன்னேற்றத்தைக் கண்டறிவதற்கு தகவல் போதாது.	

வரவு செலவுத் திட்ட வாக்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்	முன்னேற்றக் கண்காணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 50,000 வீடுகளைத் தாபிப்பதனை துரிதப்படுத்தல்	மட்டுப்படுத்தப்பட்டது	பகுதியளவு நிறைவேறியது	வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு
	கருத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்;பாக அமைச்சுகள் சில தகவல்களை வழங்கியுள்ளன. வீடமைப்பு கருத்திட்டங்கள் தொடர்பான சில தகவல்கள் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 3 வது காலாண்டு அறிக்கையில் உள்ளன. எனினும், இணையத்தில் இருக்கும் தகவல்களை வாக்குறுதிகளோடு ஒப்பிடுவது சிரமமாக உள்ளது.	இதற்குப் பொறுப்பான மூன்று நிறுவனங்களுள் எதுவுமே முழு வருடத்திற்குமான தகவல்களை வழங்கவில்லை. மதிப்பீடுக்கு எதிரான உண்மையான செலவினத்தைக் கொண்டு முன்னேற்றம் பகுதியளவிலேயே (அனைத்தும் 1 வருடத்திற்குக் குறைய) மதிப்பிடப்பட்டது..	
சிறப்பாக சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்காக பொலீஸ் திணைக்களத்திற்கு நவீன	வெளிப்படையற்றது	தகவல் வெளிப்படுத்தப்படவில்லை	சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்			
	அமுல்படுத்தும் நிறுவனம் கருத்திட்டத்தின் முன்னேற்றத்தை கண்டறிவதற்கு போதுமான தகவல்களை வழங்கவில்லை.	முன்னேற்றத்தைக் கண்டறிவதற்கு தகவல் போதாது.	
கிராமியப் பிரதேசங்களில் 1000 கி.மீ. வீதி அபிவிருத்தி	ஒத்துழைக்கப்படாதது	பகுதியளவு நிறைவேறியது	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
	நிதி முன்னேற்றம் தொடர்பாக அமைச்சு சில தகவல்களை வழங்கியுள்ளது.	2017 இல் திருத்திய செலவின ஒதுக்கீடுகளுள் 65% பயன்படுத்தப்பட்டதென்று நிதி முன்னேற்றம் எடுத்துக் காட்டுகிறது.	
தேசிய இளைஞர் சேவை மன்றம் மற்றும் இளைஞர் படையணியின் கீழ் தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	ஒத்துழைக்கப்பட்டது	முற்றாக நிறைவேறியது	தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
			அலுவல்கள் அமைச்சு
	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் தேசிய இளைஞர் பேரவை ஆகியன இந்நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக விரிவான தகவல்களை வழங்கின.	NYSC யும் NYC யும் 80 வீதத்திற்கு மேற்பட்ட முன்னேற்றம் ஏற்பட்டதாக அறிக்கையிட்டுள்ளன..	
மாற்றுத் திறமைகளைக் கொண்ட இராணுவ வீரர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்குதல்	வெளிப்படையானது	முன்னேற்றம் அற்றது	பாதுகாப்பு அமைச்சு
	கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் தொடர்பாக அமைச்சு தகவல்களை வழங்கியுள்ளது. மாற்றுத் திறனாளி படைவீரர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் தொடர்பான சில தகவல்கள் இணையத்தில் உண்டு. எனினும், இணையத் தகவல்களை வாக்குறுதிகளோடு ஒப்பிடுவது சிரமமாக உள்ளது.	வழங்கப்பட்ட தகவல்களுக்கமைய, மொத்த ஒதுக்கீட்டில் 26% இக்காலப்பகுதியில் செலவு செய்யப்பட்டுள்ளது.	

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
கோல்டன் கீ வைப்புதாரர்களுக்கான கொடுப்பனவு	ஒத்துழைக்கப்பட்டது	முற்றாக நிறைவேறியது	தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு / இலங்கை மத்திய வங்கி
	முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிதி அமைச்சு சில தகவல்களை வழங்கியது.	நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட தகவல்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 3000 மில்லியனில், ரூபா. 2500 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதென்று காட்டுகின்றன.	
1500 சிறிய குளங்களை புனரமைத்தல்	வெளிப்படையானது	பகுதியளவு நிறைவேறியது	கமத்தொழில் அமைச்சு
	முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதற்குப் போதுமான	முன்னேற்ற அறிக்கையின்படி, வரவு செலவுத் திட்டத்தில் இலக்கிடப்பட்ட 1,500	

வரவு செலவுத் திட்ட வாக்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்	முன்னேற்றக் கண்காணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
	தகவல்களை அமைச்சு வழங்கியுள்ளது.	குளங்களில் 972 குளங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.	
நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கான முழுமையான ஒரு திட்டம்	மட்டுப்படுத்தப்பட்டது	பகுதியளவு நிறைவேறியது	நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு
	கருத்திட்டத்தின் 2017 ஜூன் 30 ஆம் திகதியன்றுள்ளவாறான முன்னேற்றம் தொடர்பான தகவல்களை அமைச்சு வழங்கியுள்ளது.	2017 க்கு தரப்பட்ட பௌதீக முன்னேற்றத்தின் அடிப்படையில் பகுதியளவு கணிப்பிடப்பட்டது.	
மாணவர்களுக்கு ரூபா. 200,000 பெறுமதியைக் கொண்ட சுகாதாரக் காப்புறுதி	ஒத்துழைக்கப்பட்டது	முற்றாக நிறைவேறியது	கல்வி அமைச்சு
	காப்பீடு தொடர்பாக அமைச்சு வலைத்தளம் தகவல்களைக் கொண்டிருந்தது. RTI ஆணைக்குழுவிடம் விடுக்கப்பட்ட ஒரு கோரிக்கையை அடுத்து மேலும்	காப்பீட்டுத் திட்டம் நடைமுறையிலுள்ளது. ஏனினும், காப்புறுதித் திட்டத்தின் பயனாளிகளது எண்ணிக்கையும் கருத்திட்டத்தின் நிதி	

வரவு செலவுத் திட்ட வாக்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்	முன்னேற்றக் கண்காணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
	அதிகமான தகவல்கள் வழங்கப்பபட்டன.	முன்னேற்றமும் எவ்வளவென்று தெரியவில்லை.	
சகல பாடசாலைகளுக்கும் மின்சாரம், நீர் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குதல்	மட்டுப்படுத்தப்பட்டது	கணிசமானளவு நிறைவேறியது	கல்வி அமைச்சு
	கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 3 வது காலாண்டு அறிக்கையிலிருந்து முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட பின்னரும்கூட அமுல்படுத்தும் அமைச்சுக்கு விடுக்கப்பட்ட RTIகளுக்கு எவ்வித பதிலும் இல்லை.	கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 3 வது காலாண்டு அறிக்கையின்படி, இவ்வாக்குறுதி 73 வீத முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.	
1000 சேவாபியச அலகுகளை உருவாக்குதல்	வெளிப்படையற்றது	தகவல் வெளிப்படுத்தப்படவில்லை	பொதுநிருவாக மற்றும்

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
			முகாமைத்துவ அமைச்சு
	RTI விற்கு அமைச்சு எவ்வித தகவல்களையும் வழங்கவில்லை.	முன்னேற்றத்தைக் கண்டறிவதற்கு தகவல் போதாது.	
ரூபா 2,000 இற்கு மேல் மின்சாரக் கட்டணத்தைக் கொண்ட வீடுகளை சூரிய மின்மயமாக்கலுக்கான கடன் வசதி	வெளிப்படையானது	முற்றாக நிறைவேறியது	மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு
	முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதற்குப் போதுமான தகவல்களை அமைச்சு வழங்கியுள்ளது.	கடன் திட்டம் நடைமுறையில் உள்ளது. 2017 அன்றுள்ளவாறு 298 கடன் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ரூபா 128,442.67 வட்டி மானியமாகச் செலுத்தப்பட்டுள்ளது.	
லக் சதோச மற்றும் ஒசுசல கிளைக் கடைகள்	ஒத்துழைக்கப்பட்டது	பகுதியளவு நிறைவேறியது	கைத்தொழில் மற்றும் வாணிப

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
			அலுவல்கள் அமைச்சு
	தேசிய வரவு செலவத் திட்டத் திணைக்களத்தினால் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டன.	தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கமைய, ரூபா. 842 மில்லியன் லக் சதொச கடைகளை விரிவாக்குவதில் அல்லது வழமையான லக் சதொச விரிவாக்கல் செயற்பாடுகளில் செலவிடப்பட்டுள்ளது.	
ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு உட்பட கரையோரம் சார்ந்த 10 மாவட்டங்களில் மீன்பிடிக் கிராமங்களை மேம்படுத்தல்	வெளிப்படையானது	கணிசமானளவு நிறைவேறியது	கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
	செயல் திட்டங்கள், நிதி மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் வேறு ஆதரவு ஆவணங்கள் ஆகியன அடங்கலாக விரிவான தகவல்களை அமைச்சு வழங்கியுள்ளது.	இக்கருத்திட்டம் உட்கட்டமைப்புஃவாழ்வாதார அபிவிருத்தி முதல் பலரும் பெருமளவு சரீர மற்றும் நிதி முன்னேற்றம் கண்டுள்ள நீரக பயிர்ச்செய்கை வரையிலான செயற்பாடுகளை மேற்கொள்கிறது.	
யான் ஓயா கருத்திட்டம்	வெளிப்படையானது	முன்னேற்றம் அற்றது	நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சு
	செயல் திட்டங்கள், நிதி மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் வேறு ஆதரவு ஆவணங்கள் ஆகியன அடங்கலாக விரிவான தகவல்களை அமைச்சு வழங்கியுள்ளது.	பொது மக்களது எதிர்ப்புகளினாலும் பாதகமான காலநிலையினாலும் அணைக் கட்டுகள் மற்றும் கால்வாய்கள் ஆகியவற்றின் நிர்மாணம் தடைப்பட்டது. மீள் குடியேற்றப் பணிகளும் இழப்பீடுகளும் பெருமளவு முன்னேற்றத்தை	

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
		ஏற்படுத்தியுள்ளன. ரூபா1000 மில்லியன் ஒதுக்கீடு அன்றி, முழு யான் ஓயா திட்டத்தினதும் முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.	
கராப்பிட்டிய, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் விசேட சிறுவர் நோய்ச் சிகிச்சை அலகுகளைத் தாபித்தல்	மட்டுப்படுத்தப்பட்டது	முன்னேற்றம் அற்றது	சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு
	கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 3 வது காலாண்டு அறிக்கையிலிருந்து முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட பின்னரும்கூட அமுல்படுத்தும் அமைச்சுக்கு	கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 3 வது காலாண்டு அறிக்கையின்படி, இவ்வாக்குறுதி 2 வீத முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.	

வரவு செலவுத் திட்ட வாக்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்	முன்னேற்றக் கண்காணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
	விடுக்கப்பட்ட RTIகளுக்கு எவ்வித பதிலும் இல்லை.		
ஏற்றுமதியையும் நேரடி வெளிநாட்டு உலகளாவிய மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்	மட்டுப்படுத்தப்பட்டது	முன்னேற்றம் அற்றது	தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
	நிதி அமைச்சு 2017 செப்டெம்பர் வரையிலான கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் தொடர்பாக சில தகவல்களை வழங்கியுள்ளது.	ரூபா 500 மில்லியன் ஒதுக்கீட்டில் ரூபா 97.8 மில்லியன் இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஐந்து பங்கீடுபாட்டாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. எனினும், இந்நிதிகளின் பயன்படுத்தல் நிலைமை அறிக்கையிடப்படவில்லை.	
அதிவேக நெடுஞ்சாலைகள் நுழைவுப் பாதையில் அமைந்துள்ள தனியார் சுதந்திர வர்த்தக	வெளிப்படையானது	பகுதியளவு நிறைவேறியது	அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச

வரவு செலவுத் திட்ட வா க்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்கா ணிப்பான்	முன்னேற்றக் கண்கா ணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
வலயங்களுக்கு காணி, மின்சாரம் மற்றும் நீர் வசதிகளை வழங்குதல்			வர்த்தக அமைச்சு
	மில்லனியாவின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளன. பெல்பொல மற்றும் பிங்கிரிய தொடர்பான சில தவல்கள் வழங்கப்பபட்டுள்ளன் மில்லேவ மற்றும் ஹொறனை தொடர்பான எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை.	மில்லனிய, பெல்பொல மற்றும் பிங்கிரிய ஆகியவற்றிற்கான காணி, மின்சாரம் மற்றும் நீர் ஆகியன வழங்குவதற்கான ஆரம்ப கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.	
5,000 இருக்கை வசதிகளைக் கொண்டதாக கொழும்பில் கூட்டம், சலுகைகள், மாநாடு மற்றும் கண்காட்சி ஆகியவற்றுக்கான நிலையமொன்றை நிர்மாணித்தல்	வெளிப்படையானது	கைவிடப்பட்டுள்ளது	சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு

வரவு செலவுத் திட்ட வாக்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்	முன்னேற்றக் கண்காணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
	கருத்திட்டம் இரத்து செய்யப்பட்டது என்பதை RTIகள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்கள் எடுத்துக்காட்டின. இரத்து செய்யப்பட்டமைக்கான காரணமும் வழங்கப்பட்டது.	பொருத்தமான காணியைப் பெற்றுக்கொள்ள முடியாமையினால், 2017 இல் இம்முன்மொழிவு அமுல்படுத்தப்படவில்லை.	
பொல்கஹவல முதல் குருநாகல் வரையான பகுதியிலும் அழுத்கமை முதல் காலி வரையான பகுதியிலும் உள்ள இரயில் பாதையில் இரட்டைப் பாதையை அமைத்தல	மட்டுப்படுத்தப்பட்டது	முன்னேற்றம் அற்றது	போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
	கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 3 வது காலாண்டு அறிக்கையிலிருந்து முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் பெற்றக்கொள்ளப்பட்டன. RTI கோரிக்கை வாயிலாக சில தகவல்கள் வழங்கப்பட்டன.	கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 3 வது காலாண்டு அறிக்கையின்படி, இவ்வாக்குறுதி 2 வீத முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.	

வரவு செலவுத் திட்ட வாக்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்	முன்னேற்றக் கண்காணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
100,000 வீடுகளுக்காக ரூபா 200,000 வரையிலான கடன் திட்டத்திற்காக 50% வட்டி நிவாரணத்தை வழங்குதல்	மட்டுப்படுத்தப்பட்டது	முற்றாக நிறைவேறியது	நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
	இக்கருத்திட்டத்திற்கான செயல்திட்டமொன்றை அமைச்சு வழங்கியுள்ளது. கடன் திட்டம் பற்றிய விபரங்கள் இணையத்தில் கிடைக்கக்கூடியனவாக உள்ளன.	கடன் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. எனினும், பயனாளிகளின் எண்ணிக்கை தெரியவில்லை.	
பங்களிப்பு ஓய்வூதிய நிதியம்	ஒத்துழைக்கப்பட்டது	கைவிடப்பட்டுள்ளது	பொதுநிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
	தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது.	பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகளுக்கு வசதியேற்படுத்துமுகமாக ஒரு புதிய பொது ஓய்வூதியச் சட்டத்தை தயாரிப்பதற்கு முயற்சிகள்	

வரவு செலவுத் திட்ட வாக்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்	முன்னேற்றக் கண்காணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
		மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	
தெற்கு அபிவிருத்தி	வெளிப்படையானது	முன்னேற்றம் அற்றது	சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
	RTI விற்கான பதிலில் அமைச்சு முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்கியது.	இக்காலப்பகுதியின் இறுதியில் 12 வீத முன்னேற்றம் ஏற்பட்டிருந்ததாக வாக்குறுதி அறிக்கையிடுகிறது.	
வுட மாகாணத்தில் தனியார் துறை வியாபாரங்களை விரிவுபடுத்துவதற்காக வசதியளிக்கும் வகையில் நிலைக்குத்தான கட்ட நிர்மாணித்தல்	ஒத்துழைக்கப்படாதது	கைவிடப்பட்டுள்ளது	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
	ஒரு காரணம் தரப்பட்டு, கருத்திட்டம் இரத்து செய்யப்பட்டது என்பதை RTIகள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்கள் எடுத்துக்காட்டின. 2018	காலநிலை தொடர்புபட்ட அவசர தேவைகளுக்காக நிதிகள் மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டமையினால்,	

வரவு செலவுத் திட்ட வாக்குறுதி	வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்	முன்னேற்றக் கண்காணிப்பான்	ஏஜென்சி தரவரிசை
	இல் இக்கருத்திட்டம் அமுல்படுத்தப்படமாட்டாது.	இம் முன்மொழிவு 2017 இல் அமுல் படுத்தப்படவில்லை.	
திருகோணமலை மாவட்டத்தில் 'சிரி சர பிவிசும' நிகழ்ச்சித் திட்டம்	வெளிப்படையானது	பகுதியளவு நிறைவேறியது	சனாதிபதி செயலகம்
	கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் தொடர்பாக அமைச்சு சில தகவல்களை வழங்கியுள்ளது.	2017 க்கு தரப்பட்ட பௌதீக முன்னேற்றத்தின் அடிப்படையில் பகுதியளவு கணிப்பிடப்பட்டது.	

பொறுப்புத்துறத்தல்

இந்த இணைய மேடையில் பிரசுரிக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் அரச ஆவணங்கள், உத்தியோகபூர்வ வெளியீடுகள், பொது ஆவணங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. இந்த இணைய மேடையில் பிரசுரிக்கப்படும் தகவல்கள் எவையும் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தினதோ அந்நிறுவனத்தில் பணிபுரிபவர்களினதோ தனிப்பட்ட நோக்கோ கருத்துக்களோ கிடையாது. இந்த இணையமேடையில் உள்ள தகவல்களின் காரணமாக ஏற்படும் எவ்வகையான இழப்புக்கள் மற்றும் சேதங்களிற்கோ அல்லது ஏற்படலாம் என அனுமானிக்கக்கூடிய எவ்வகையான இழப்பு, சேதம் அல்லது நற்பெயரிற்கான களங்கங்களிற்கோ வெரிட்டே ரிசர்ச் நிறுவனம் பொறுப்பெடுக்காது.

இந்த இணையமேடையில் பிரசுரிக்கப்படும் தரவுகள் அனைத்தையும் நம்பகமான மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கும் அதேவேளை, அத்தரவுகளைக் கொண்டு

பெற்ற பெறுபேறுகளில் காணப்படும் தவறுகள் அல்லது விடுபடல்களிற்கு வெரிட்டே ரிசர்ச் நிறுவனமோ budgetpromises.org குழு அங்கத்தவர்களோ பொறுப்பாக மாட்டார்கள். வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் அனுமதியின்றி இந்த இணையமேடையில் உள்ள உள்ளடக்கங்களை வணிக நோக்கத்திற்காக திருத்தவோ, வெளியிடவோ, கைமாற்றவோ, பரவலாக்கவோ, விற்பனை செய்யவோ, மீள்பதிக்கவோ, இதனைத் தழுவி புதிய உள்ளடக்கங்களை உருவாக்கவோ, பகிர்ந்தளிக்கவோ, மீள்இடுகையிடவோ அல்லது காட்சிப்படுத்தவோ எவரிற்கும் அனுமதியில்லை. அத்துடன் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் முன் அனுமதியின்றியோ, முன் அனுமதியுடனோ இந்த இணையமேடையில் உள்ள தரவுகளைக் கொண்டு மீள்உருவாக்கப்படும் எவ்வகையான வெளியீடுகளிற்கும் budgetpromises.org குழு பொறுப்பெடுக்காது.

budgetpromises.org எவ்விதமான அரசியல் கட்சிகளை பிரதிநிதிப்படுத்துவதோ, ஆதரிப்பதோ, ஒப்புதல் வழங்குவதோ அல்லது எவ்விதமான அரசியற் கட்சிகளுடனோ அரசியலுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினுடனோ தொடர்புபட்டது அல்ல. அத்துடன் எமது பகுப்பாய்வுகள் அனைத்தும் புள்ளிவிபரங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட அனுமானங்கள் ஆகும்.

இந்த இணையமேடையில் உள்ள அனைத்து தரவுகளும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் எவ்வித கட்டணங்களும் இன்றி வழங்கப்படுகின்றது. இத்தரவுகளைப் பாவிப்பதற்கு பாவனையாளர் மற்றும் வெரிட்டே ரிசர்ச் அல்லது budgetpromises.org குழுவினரிற்கும் இடையில் எவ்வித ஒப்பந்தங்களோ, புரிந்துணர்வுகளோ கிடையாது.

இந்த இணையமேடை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின் போக்கினை குறித்துக்காட்டுவதற்காக, budgetpromises.org இனால் சுயாதீனமாக தயாரிக்கப்பட்ட பல பகுப்பாய்வுகளையும்

உள்ளடக்கியுள்ளது. இப்பகுப்பாய்வுகளை மீள் உருவாக்கம் செய்யும் முன் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் அனுமதியைப் பெறுவது கட்டாயமாகும்.